# பாரதீய ஜனதா கட்சி

(மத்திய அலுவலகம்)

11, அசோக் சாலை, புதுடெல்லி 01

தொ.பேசி 011 23005700, தொலைநகல் 011 23005787

## பாஜகவின் தேசிய செய்தித் தொடர்பாளர் திருமதி.நிர்மலா சீதாராமன் வெளியிட்ட அறிக்கை

28 ஜனவரி 2013

உத்தரப் பிரதேசத்தின் முன்னாள் முதல்வர் குமாரி மாயவதியின் சகோதரரை உரிமையாளராகக் கொண்ட நிறுவனங்களின் மூலமாக நடந்த சந்தேகத்துக்கிடமான பல நூறுகோடி ரூபாய் பரிவர்த்தனையை புகழ்பெற்ற நாளிதழ் ஒன்று அம்பலப்படுத்தியுள்ளது.

1.மாயாவதி முதலமைச்சராக இருந்த காலகட்டத்தில்(2007 2012) அவரது சகோதரர் திரு. ஆனந்தகுமார் தனது ஏழு நிறுவனங்களுக்காக 757 கோடி ரூபாயைப் பெற்றுள்ளார். அப்போது அந்த நிறுவனங்கள் தொடர்பான துறையை தனது கட்டுப்பாட்டில் வைத்திருந்தவர் முதல்வர். மாயாவதி.

2011இல் நடந்த சட்டமன்றத் தேர்தல்களில்,ஆனந்த்குமார் மீது பாஜக ஒரு குற்றச்சாட்டை வைத்தது. 76 நிறுவனங்களைத் தொடங்கி கருப்புப் பணத்தை வெள்ளையாக்கியதாகவும், அவரது வருவாய்க்கு அதிகமாகச் சொத்துகள் சேர்த்ததாகக் குற்றம் சாட்டியது. வரிகள் குறைவாக உள்ள இடங்களில் உள்ள நிறுவனங்களில் ஆனந்த்குமார் முதலீடு செய்திருந்ததையும் அப்போதே பாஜக சுட்டிக்காட்டியிருந்தது. முதலமைச்சர் மாயாவதியுடனான தனது சகோதர உறவை

துஷ்பிரயோகமாகவும், சட்ட விரோதமாகவும் அவர் பயன்படுத்தியுள்ளார். எக்னாமிக் டைம்சில் வெளியாகியுள்ள இக்குற்றச்சாட்டு முன்பே பாஜக சொன்ன குற்றச்சாட்டுகளை உறுதிப்படுத்தியுள்ளது. மாயாவதியின் பதவிக்காலத்தில் திரு. ஆனந்த குமாரின் நிறுவனங்களுக்கு, மர்மமான முறையில் பணம் வந்திருப்பதும், அடையாளம் கூறமுடியாத சொத்துகளை விற்றதன் மூலம் பெரும் லாபங்களையும் அவரது நிறுவனங்கள் ஈட்டியுள்ளன. மதிப்பே இல்லாத நிறுவனங்களின் பங்குகள் ப்ரீமியம் தொகைக்கு விற்கப்பட்டுள்ளன. ஆனந்தகுமாரின் நஷ்டத்தில் ஓடும் நிறுவனத்துக்கு, குறிப்பிடப்படாத சேவைகளுக்காக முன்பணம், மூன்றாம் நபர்களால் கொடுக்கப்பட்டுள்ளது. இது ராபர்ட் வதேரா கடைபிடித்த அதே பாணியாகும்.
ஆனந்த் குமாரின் நிறுவனங்களுக்கு வந்த பணங்களின் மூலம் என்ன? ஒரு லட்ச ரூபாய் முதலீட்டுக்கு நம்ப முடியாத அளவில் லாபப்பங்குத் தொகை கொடுக்கப்பட்டுள்ளது. எப்படி, எதற்காக இத்தொகை வந்தது?

பகுஜன் சமாஜ கட்சித் தலைவியின் சகோதரர் நிறைய கேள்விகளுக்குப் பதில் அளிக்க வேண்டியுள்ளது. ஊழல்வாத காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்குக் கூட்டணியின் வலுவான கூட்டாளியாக பகுஜன் சமாஜ கட்சியின் தலைவி இருக்கிறார். சில்லரை வர்த்தகத்தில் அந்நிய முதலீட்டை அனுமதிப்பது தொடர்பான விவகாரத்தில் மாயாவதி மேற்கொண்ட இரட்டை நிலையை நாடு முழுவதும் பார்த்தது.

இச்சூழ்நிலையில்

- ஆனந்த்குமாருடைய நிறுவனங்களின் பணப்பரிவர்த்தனை குற்றச்சாட்டுகள் தொடர்பாக, பாஜக முழுமையான விசாரணையைக் கோருகிறது.

- நிதி அமைச்சகம் இந்த நிறுவனங்களுக்கு நோட்டீஸ் அனுப்புமா?
- பகுஜன் சமாஜ் கட்சித் தலைவியின் சகோதரர் உரிமையாளராக உள்ள நிறுவனங்கள் குறித்த கள ஆய்வு நடத்தப்படுமா?
- கம்பெனி விவகாரத் துறை அமைச்சகத்தால் இந்த நிறுவனங்களும், அது தொடர்பான ஆவணங்களும் சீல் வைக்கப்படுமா?

2. மத்திய தலைமைக் கணக்குத் தணிக்கைத் துறை மூலம் இன்னொரு ஊழல் வெளியாகியுள்ளது. நாட்டில் உள்ள விவசாயிகளின் பெயரில் நடத்தப்பட்ட ஊழல் இது.

ஐக்கிய முற்போக்கு கூட்டணியின் முந்தைய ஆட்சிகாலத்தில் 52 ஆயிரத்து 280 கோடி ரூபாய் வேளாண்மைக் கடன் தள்ளுபடி செய்யப்பட்டது. மத்திய தலைமைக் கணக்குத் தணிக்கை துறை ஏப்ரல் 2011 முதல் மார்ச் 2012 வரையிலான தணிக்கையை செயல்திறன் தணிக்கையை நடத்தியது. இந்த தணிக்கை 92 மாவட்டங்களில் உள்ள 715 வங்கிக் கிளைகளில் 90 ஆயிரத்து 576 விவசாயிகள் கணக்கின் மீது நடத்தப்பட்டது. மத்திய தலைமைக் கணக்குத் தணிக்கை துறையினர் அறிக்கையில் இந்த திட்டம் அமலான சமிக்ஞைகளே இல்லை என்று ஊடகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. தேசிய கண்காணிப்புக் குழுவும் தனது கடமையைச் செய்ய தவறிவிட்டது. நிதி அமைச்சகம், இந்திய ரிசர்வ் வங்கி மற்றும் நாபார்டு ஆகியவற்றுக்கிடையே இதை அமல்படுத்துவதற்கான ஒருங்கிணைப்பே இல்லை. இந்த திட்டத்தை அமல்படுத்துவதற்கான ஒரு கூட்டம் நடந்த குறிப்புகள்கூடக் கைவசம் இல்லை என்று ஊடகங்களில் செய்திகள் வெளியாகியுள்ளன.

கடந்த ஐந்தாண்டுகளில் வரிசெலுத்தும் மக்களின் 52 ஆயிரம் கோடி ரூபாய் சரியாக செலவழிக்கப்பட்டதா என்பதைக் கவனிக்க அரசு முயற்சிக்கவேயில்லை என்பதுதான் இதில் மிகுந்த கவலைக்குரிய விஷயமாகும்.

இப்பிரச்னை பூதாகரமாக எழும் என்பதை உணர்ந்த நிதி அமைச்சகம் இந்த மாதம் 11 ஆம் தேதி அன்று தவறிழைத்த அதிகாரிகள் மற்றும் வங்கிகள் மீது நடவடிக்கை எடுக்கச் சொல்லி ரிசர்வ் வங்கியையும் நாபார்டையும் பணித்துள்ளது. தகுதி வரம்பற்ற விவசாயிகளிடமிருந்து கடனை வசூலிக்கவும் உத்தரவிட்டுள்ளது.

- கடன் தள்ளுபடியால் பயன்பெற்ற 3.44 கோடி விவசாயிகள் தொடர்பான முழுமையான கணக்குத் தணிக்கை விவரங்களை பாஜக கோருகிறது.

நிதி அமைச்சராக இருந்த ப.சிதம்பரம் 2009 ஆம் ஆண்டு தேர்தல்களை மனதில் வைத்துக் கொண்டே விவசாயிகள் கடன் தள்ளுபடித் திட்டத்தை வடிவமைத்து முன்வைத்தார். அடுத்து வந்த ப்ரணாப் முகர்ஜி எந்த தொலைநோக்குப் பார்வையும் இன்றி இத்திட்டத்தை அமல்படுத்தினார். இதற்கான சாட்சியாகவே மத்திய தலைமைக் கணக்குத் தணிக்கைக் குழுவின் அறிக்கை உள்ளது.

- விவசாயிகள் கடன் தள்ளுபடித் திட்டத்தை அமல்படுத்தாமல் அலட்சியமாக இருந்ததில் மேற்சொன்ன இரு நிதி அமைச்சர்களின் பொறுப்பு என்ன என்பதை ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு விளக்க வேண்டும் என்று பாஜக கோருகிறது.

(ஓ.பி.கோஹ்லி)

**தலைமை நிலையப் பொறுப்பு**